

# ‘காணாமல் போனவர்களின் குடும்பங்கள் ஒருவக்கொருவர் உதவி செய்தல்’

சுருக்கக்கையேடு

ICRC


J. Atkinson/ICRC

எனது மகனை 26 ஆண்டுகளாக காணவில்லை. இந்த குழுவில் சேரும் வரை நாங்கள் எங்கள் குடும்பத்திற்கு வெளியே யாரிடமும் இதுபற்றி பேசவில்லை. முன்பு, நாங்கள் ஒரே கிராமத்தில் வாழ்ந்தாலும், ஒருவரை ஒருவர் அடிக்கடி கண்ட போதும், நாங்கள் எமக்குள் இருந்த பொதுவான வலியைப் பற்றி யாரிடமும் பகிர்ந்து கொண்டதில்லை. நாம் வெறுமனே முகமன் கூறி கடந்து சென்றோம். இப்போது, நாங்கள் ஒருவருக்கொருவர் நன்கு அறிந்திருக்கிறோம். காணாமல் போன எங்கள் குழந்தைகளைப் பற்றி பேசுவது, பல ஆண்டுகளாக நாங்கள் சுமந்து வந்த பாரமான சுமையிலிருந்து விடுவித்துள்ளது.

- காணாமல் போன நபரின் தாய்




# துணைநிற்கும் நிகழ்ச்சித் திட்டம்

ஐப்பசி 2014 தொடக்கம் கார்த்திகை 2015 வரை, கடந்த ஆயுத மோதலின் விளைவாக, பாதுகாப்புப் படையினர் உட்பட காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் பன்முகத் தேவைகளைப் புரிந்துகொள்வதற்காக, செஞ்சிலுவை சர்வதேச குழு (ஐசிஆர்சி) ஆனது இலங்கையில் ஒரு நாடளாவிய மதிப்பீட்டை மேற்கொண்டது. 2016 தை மாதத்தில், மதிப்பீட்டிலிருந்து கண்டறிந்த விடயங்களையும் அடையாளம் காணப்பட்ட தேவைகளை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பதற்கான பரிந்துரைகளையும் அதிகாரிகளுடன் ஐசிஆர்சி பகிர்ந்து கொண்டது.

இந்த மதிப்பீட்டின் பொது அறிக்கை 2016ம் ஆண்டு ஆணி மாதம் பிரசுரிக்கப்பட்டது. இவ் அறிக்கையை ஆங்கிலம், சிங்களம், மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் வாசிக்கக் கூடியதாக இருக்கும். அதற்கு இந்த இணைய முகவரியை அணுகவும். https://www.icrc.org/en/document/sri-lanka-families-missing-persons இந்த மதிப்பீட்டின் படி, தங்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன ஆனது என்பதை பற்றி அறியவே குடும்பங்கள் அதிகம் எதிர்பார்த்தார்கள். தங்கள் அன்புக்குரியவர் இல்லாததால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மையை சமாளிக்க அவர்களுக்கு உணர்ச்சிபூர்வமான ஆதரவு தேவைப்பட்டது. அது மட்டுமன்றி வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், மீட்டெடுப்பதற்கும் பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாக விடயங்களுக்கும் ஆதரவு தேவைப்பட்டது.

இந்த தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக, 2015 ஆம் ஆண்டின் இறுதியில் நாடளாவிய ரீதியிலான துணை நிற்கும் நிகழ்ச்சி திட்டத்தை ஐசிஆர்சி நேரடியாகவும் உள்ளூர் அமைப்புகள் மூலமாகவும் அமுல்படுத்தியது. காணாமல் போனவர்களின் குடும்பங்கள் உணர்ச்சி பூர்வமான சவால்களை சமாளிக்கவும் அது மட்டுமன்றி பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் இந்தத் திட்டம் உதவுகிறது.

இத்துணை நிற்கும் நிகழ்ச்சித் திட்டமானது மூன்று கூறுகளை உள்ளடக்கியுள்ளது

1. உளநல மற்றும் உள சமூக ஆதரவு: காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு தங்கள் அன்புக்குரியவர்கள் காணாமல் போனமை பற்றிய போதியளவு தகவல்கள் இல்லாமை மற்றும் அவர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பது பற்றிய நிச்சயமற்ற தன்மை "தெளிவற்ற இழப்பு" எனப்படும். இத்தெளிவற்ற இழப்பினை சமாளிக்கும் முகமாக காணாமல் போனவரின் குடும்பங்களுக்கு உணர்ச்சிபூர்வமான ஆதரவு வழங்குதல் மற்றும் அவர்களின் தேவைகள் கஸ்டங்கள் பற்றி உளநல

பயிற்சியாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2. பரிந்துரை சேவைகள்: சம்பந்தப்பட்ட சேவை வழங்குநர்களை காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு பரிந்துரைப்பதன் மூலம் இத்திட்டத்தின் எல்லைக்கு வெளியே உள்ள சட்ட, நிர்வாக மற்றும் பொருளாதாரத் தேவைகளைக்கு அவர்களை வழிகாட்டுதல்.

3. பொருளாதார பாதுகாப்பு: காணாமல் போன குடும்பங்களில் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு வேறு வளங்கள் கிடைக்காத பட்சத்தில், தங்கள் வாழ்வாதாரத்தை மீள ஆரம்பிக்க அல்லது விஸ்தரிக்க உதவுதல்

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான மனித நேய நடவடிக்கையின் ஒரு கட்டமாக, ஐசிஆர்சி தேசிய மட்டத்திலான தேடுதல் பொறிமுறைக்கு (காணாமல் போனோருக்கான அலுவலகம்) தொழில்நுட்ப ஆதரவை வழங்கியுள்ளது.

## 1. காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான உளநல மற்றும் உள சமூக ஆதரவு

உளநல மற்றும் உள சமூக ஆதரவு திட்டமானது காணாமல் போனவர்களின் குடும்பங்களாலோ அல்லது சமூகப் பணியாளர்களாலோ மேற்கொள்ளப்படுகிறது. இவர்கள் "துணை நிற்பவர்கள்"என அடையாளம் காணப்படுவர். அவர்கள் தங்கள் சமூகங்களில் காணாமல் போனவர்களின் மற்ற குடும்பங்களுடன் நேரடியாக வேலை செய்கிறார்கள். கொடுக்கப்பட்ட பகுதியில் வாழும் குடும்பங்களின் உளவியல், சமூகத் தேவைகளை மதிப்பிடுவதற்கும், வீட்டுத்தரிசிப்பு மற்றும் சக ஆதரவு குழு அமர்வுகள் மூலம் அவர்களுக்கு உணர்ச்சிபூர்வமான ஆதரவை வழங்குவதற்கும் ஐசிஆர்சி துணை நிற்பவர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. இந்த அமர்வுகளில் கவிதைகள், ஓவியங்கள், கைவினைப்பொருட்கள், பாடல்கள் அல்லது காணாமல் போனவரின் விருப்பமான உணவைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் காணாமல் போன நபரை பற்றிய நேர்மறையான எண்ணங்களை குழுவோடு பகிர்ந்து கொள்ள குடும்பங்களுக்கு உதவுகின்றன.

தங்கள் அன்புக்குரியவர்கள் காணாமல் போனதன் விளைவாக ஏற்பட்டுள்ள நிர்வாக மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சனைகளைத் தீர்த்து கொள்வதில் குடும்பங்களுக்குக் கிடைக்கக் கூடிய சேவைகளை நோக்கி துணை நிற்பவர்கள் அவர்களை வழிநடத்துவார்கள்.

ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவியல்-சமூக உதவிகளை வழங்குவது தொடர்பாக துணை நிற்பவர்களுடன் வேலை செய்வதற்கு, உள சமூக துறையில் அனுபவமிக்க உள்ளூர் நிறுவனங்களுடன் ஐசிஆர்சி இணைந்து செயல்படுகிறது. குடும்பங்களின் நிலவரத்தை புரிந்து கொள்வதற்கும் நிகழ்ச்சியின் நீண்டகால நிலையான தன்மையை ஊக்குவிப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் பின்புல அறிவு இந்நிறுவனங்களுக்கு இருப்பதை ஐசிஆர்சி உறுதிப்படுத்துகின்றது.




"குழு அமர்வுகளின் போது நாங்கள் எங்கள் துக்கங்களையும் வேதனையையும் பகிர்ந்துக்கொண்டு, மனப் பாரம் குறைந்து வீட்டிற்குச் செல்கிறோம்."

- காணாமல் போன ஒருவரின் மனைவி



ICRC

## 2. காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு பரிந்துரை சேவைகளை வழங்குதல்

துணை நிற்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நேரடியாக தீர்க்க முடியாத தேவைகள், தற்போது உள்ள சேவை வழங்குனர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படும். இவை நிர்வாக ரீதியான தேவைகளாகவோ, உளவியல் ஆதரவு போன்ற சிக்கலான வேறு தேவைகளாகவோ இருக்கக்கூடும்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களின் தேவைகளை மதிப்பிட்டு, அத்தகைய குடும்பங்களை சேவை வழங்குனர்களுடன் தொடர்புபடுத்துவதற்கு உள்ளூரில் கிடைக்கக்கூடிய வளங்களை இனங்காண துணை நிற்பவர்கள் பயிற்றுவிக்கப்படுவார்கள். இந்தத் தேவைகள் உரிய முறையில் பின்தொடரப்பட்டு தீர்க்கப்படுவதை ஐசிஆர்சி உறுதி செய்யும்.



K.Prasanna/ICRC

நானும் என் கணவரும் மரக்கறி செய்கையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கையை நடத்துகிறோம். இந்த வயதிலும் ஒவ்வொரு நாளும் வேலை செய்வது கஸ்டமானது. எமது மகன் காணாமல் போனார். அவர் இருக்கையில் இருந்த சந்தோசம் இப்போது இல்லை. மகன் எம்முடனேயே இருந்திருந்தால், எமக்கு சௌகரியமாக இருந்திருக்கும். துணை நிற்பவருடன் எமது கஸ்டங்களைப் பேசினேன். அவர் சிரேஸ்ட பிரஜைகளுக்கான உதவிக் கொடுப்பனவைப் பெறுவதற்காக சமூக சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்க எமக்கு உதவினார். இப்போது எனக்கு ஒவ்வொரு மாதமும் 2,000 ரூபா கிடைக்கிறது. இதன்மூலம் மருந்தையும், உணவுப் பொருட்களையும் வாங்குகிறேன். இப்போது, நான் மிகவும் நிம்மதியாக உணர்கிறேன்.

- காணாமல் போன மகனின் தாய்

# 3. காணாமல் போனவர்களின் குடும்பங்களின் பொருளாதார பாதுகாப்பை மேம்படுத்தல்

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் பெரும்பாலும் பலதரப்பட்ட பொருளாதார பிரச்சனைகளை எதிர்கொள்வது வழக்கம். இந்தப் பிரச்சனைகளில் நிலையான வருமானங்கள் இல்லாமை அல்லது குறைகின்றமை சொத்துக்களின் இழப்பு அல்லது போதாமை, அர்த்தமுள்ள உதவிகள் இல்லாதிருப்பது போன்றவையும் அடங்கும். இதன் விளைவாக, பல குடும்பங்கள் தத்தமது அவசர தேவைகளை நிறைவேற்றுவதற்காக உடமைகளை விற்பதும், உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைப்பதும், கடன்பெறுவதும் போன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றனர். செஞ்சிலுவை சர்வதேச குழுவானது காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கென்றே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வாழ்வாதார உதவிகளை வழங்கி, இந்த சவால்களை நிலையான முறையில் எதிர்கொள்ள உதவி செய்கிறது.

வீட்டு பொருளாதார மதிப்பீடுகள் மற்றும் வர்த்தக யோசனைகளின் மீள்பரிசீலனையை அடுத்து, ஐசிஆர்சி காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு சிறு பொருளாதார முயற்சித் திட்டத்தின் ஊடாக உதவுகிறது. இத்திட்டத்திற்கு தகைமை பெற்ற குடும்பங்கள், தத்தமது வர்த்தக யோசனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு சிறு வர்த்தகங்களில் முதலீடு செய்வதற்கு பண உதவிகளைப் பெறுகிறார்கள்

குறிப்பாக ஆதரவற்ற குடும்பங்களுக்கு நிபந்தனையற்ற பண உதவித்தொகை வழங்கப்படுகிறது. இது அவர்களின் உடனடித் தேவைகளை ஈடுசெய்யவும், வருமானத்தை அதிகரிக்கும் எளிமையான வாழ்வாதார திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் மற்றும் ஆரோக்கியமான உணவைப் பெறவும் உதவுகிறது.

அரச தொழில்நுட்பத் திணைக்களங்கள் மற்றும் ஏனைய சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், ஐசிஆர்சி காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு அடிப்படை வணிக முகாமைத்துவ ஆற்றல்கள் மீதான பயிற்சிகள் மூலம் தமது வர்த்தக முயற்சிகளை விருத்தி செய்து கொள்ள உதவி செய்கிறது. அவர்கள் தமது வணிகத்தை விருத்தி செய்யவும், சமூகப் பிணைப்பை வலுவுறச் செய்வதில் பங்களிப்பு நல்கக் கூடிய வலைப்பின்னலாக்க நடைமுறையின் ஊடாக நிதிச் சேவை வழங்குனர்கள் மற்றும் சமுதாய கூட்டுறவு அமைப்புக்களை நாடவும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. இதற்கு அப்பால், சூழலின் நிலையான தன்மைக்கு பங்களிப்பு நல்கக் கூடிய வகையில் இந்தக் குடும்பங்கள் தமது சிறு பொருளாதார முயற்சிகளுக்கு தேவையான மீள் சுழற்சி, கழிவுப் பொருள் முகாமைத்துவம், கரிம பயிர்ச்செய்கை ஆகியவை பற்றிய அறிவையும் பெறுகின்றனர்.




**என் மகள் ஒரு அழகான பெண்ணாக வளர்வதைப் பார்க்க நான் தினமும் மிகவும் கடினமாக உழைக்கின்றேன். அவளுக்கு சிறந்த கல்வியை வழங்குவது எனக்கு ஊக்கத்தையும் மற்றும் மகிழ்ச்சியியையும் அளிக்கிறது. செஞ்சிலுவை சர்வதேச குழுவின் வாழ்வாதார முயற்சியால் என்னால் நிலையான வருமானத்தை ஈட்ட முடிகின்றது. நான் அவளுடைய வயதில் இருந்தபோது எனக்கு கிடைக்காத அனைத்தையும் என் மகள் பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இரவு முழுவதும் கண் விழித்து பைகள் மற்றும் ஆடைகளைத் தைக்க வேண்டியிருப்பின் நான் அதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.**

**- காணாமல் போனவரின் மனைவி**




“எனது குழுவில் கணவன்மார் காணாமல் போன பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் பேசிய பின்னர் நான் லேசாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். எனது அனுபவங்களின் அடிப்படையில், என்னைப் போன்ற மற்ற பெண்களுக்கும் நான் அறிவுரை கூறி வருகிறேன். எமது குழு இப்போது வலுவான பிணைப்பைக் கொண்டுள்ளது. எமது வாராந்த கூட்டங்களுக்கு மத்தியில் நாம் ஒவ்வொருவருடன் தொலைபேசியிலும் பேசிக் கொள்கிறோம்.”

- காணாமல் போன ஒருவரின் மனைவி

செஞ்சிலுவை சர்வதேச குழுவானது (ஐசிஆர்சி) உலகின் பல பாகங்களிலும் ஆயுத மோதலினால் மற்றும் வேறு பிற வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு-கிறது. பெரும்பாலும் செஞ்சிலுவை, செம்பிறை பங்காளர்களுடன் இணைந்து, இந்த மக்களின் கௌரவத்தை பாதுகாக்கவும், துயர் துடைக்கவும் தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்கிறது. ஐசிஆர்சி மனிதாபிமான சட்டத்தை மேம்படுத்தி வலுப்படுத்துவதாலும், உலகளாவிய மனிதாபிமான கொள்கைகளை ஆதரிப்பதாலும் துயரங்களை தவிர்க்க முனைகிறது.

facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc

**செஞ்சிலுவை சர்வதேச குழு**
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
T + 94 (11) 250 33 46
F + 94 (11) 250 33 48
E-mail: colombo@icrc.org www.icrc.org

**வவனியா அலுவலகம்**
70, வைரவர் கோயில் வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா
T +94 (0) 24222 28 55
F +94 (0) 24222 25 37

**மட்டக்களப்பு அலுவலகம்**
மன்ரேஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
T +94 (0) 65 222 70 70

ICRC

© ICRC, October 2021

1702/250 10.2021 Cover Photo: ICRC